# அரநாயக்க பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, அரநாயக்க பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரநாயக்க பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபையிடம் இருந்த தகனக் கூடக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 10,429,917 தொகை மூலதனமாக்கப்பட்டிராத காரணத்தால் காணி கட்டிடங்கள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கீட்டு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,837,082 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கையின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,659,625 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,177,457 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,078,050 ஆக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 5,016,239 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டவை | உள்ளவாறானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i). | வீதவரியும் வரியும் | 560 | 521 | 467 |
| (ii). | குத்தகைக் கட்டணம் | 2,015 | 1,739 | 134 |
| (iii). | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 651 | 542 | 109 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,677 | 15,672 | 15,156 |